ශ්‍රී ලංකා විභාග ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை கணக்காளர் சேவை தரம் III ற்கு ஆட்சேர்ப்பதற்கான**
**திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2014**

Open / Limited Competitive Examination for Recruitment to Grade III
of the Sri lanka Accountants' Service - 2014

**(02) நிதிக் கணக்கியல் - வினாத்தாள் II**

Financial Accounting - Paper II

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.

**1.** (i) RCS அசோசியேட்ஸில் ரொசான், சத்துரங்க மற்றும் சத்துருவன் ஆகிய மூன்று பங்காளர்கள் முறையே வியாபார இலாப நட்டங்களை 3:2:1 என்று விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். பங்குடைமை ஒப்பந்தப்படி மூலதன வட்டியாக 10% பெறுவதற்கு பங்காளர் உரித்துடையவராவார். மேலும் ரொசான் மற்றும் சத்துருவன் மாதாந்த சம்பளமாக முறையே ரூபா 20 000 ஐயும் 15 000 ஐயும் பெற உரித்துடையவர்கள்.

31.03.2014 ல் பங்குடமை வியாபாரத்திலே உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.

| | ரூபா. ('000) | ரூபா. ('000) |
|---|---|---|
| மூலதன மீதிகள் 01.04.2013 | | |
| - ரொசான் | – | 5 000 |
| - சத்துருங்க | – | 4 000 |
| - சந்துருவன் | – | 3 500 |
| நடைமுறைக் கணக்கு மீதிகள் 01.04.2013 | | |
| - ரொசான் | – | 200 |
| - சத்துருங்க | – | 100 |
| - சந்துருவன் | 50 | – |
| தொக்குகள் 01.04.2013 கிரயம் | 780 | – |
| கொள்வனவுகள் | 6 600 | – |
| காணிகட்டிடம் - கிரயத்தில் | 7 500 | – |
| அலுவலக உபகரணம் - கிரயத்தில் | 2 500 | – |
| மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில் | 2 700 | – |
| முதலீடுகள் | 500 | – |
| தேய்மான ஒதுக்கம் 01.04.2013 | | |
| - கட்டிடம் | – | 600 |
| - அலுவலக உபகரணம் | – | 700 |
| - மோட்டார் வாகனங்கள் | – | 850 |
| விற்பனை | – | 15 250 |
| வட்டிச் செலவு | 150 | – |
| வாடகை | 440 | – |
| விற்பனை திரும்பல் | 250 | – |
| கழிவு பெற்றது மற்றும் கொடுத்தது | 160 | 60 |
| விற்பனை செலவுகள் | 1 350 | – |
| அலுவலக செலவுகள் | 3 750 | – |
| வருமதியாளர்களும் ஐயக்கடன் ஒதுக்கமும் | 4 200 | 1 415 |
| அறவிட முடியாக்கடன் மற்றும் ஐயக்கடன் | 420 | – |
| உட்சுமை கூலி | 180 | – |
| நன்மதிப்பு | 500 | – |
| கடன் கணக்கு - சந்துருவன் | – | 300 |
| எடுப்பனவு | | |
| - ரொசான் | 250 | – |
| - சத்துரங்க | 300 | – |
| - சந்துருவன் | 175 | – |
| வங்கி மேலதிகப் பற்று | – | 780 |
| | **32 755** | **32 755** |

[பக் 2 ஐப் பார்க்க.

**மேலதிக தகவல்கள் ;**

(அ) 31.03.2014 ல் சந்துருவன் பங்குடைமையிலிருந்து ஓய்வுபெற்றதுடன் ரொசானும் சத்துரங்கவும் பங்குடைமையை தொடர்ந்து நடாத்தி செல்வதாகவும் இலாப நட்டங்களை சமமாக பகிருவதாகவும் தீர்மானித்தனர். சந்துருவனுக்கு உரித்தான மொத்த தொகை அவரது கடன் கணக்குக்கு மாற்றப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

(ஆ) புதிய பங்குடைமை ஒப்பந்தப்படி பங்காளர்கள் இலாபபகிர்வாக சம்பளம் பெற முடியாது. மூலதன வட்டியாக ஆண்டுக்கு 12% உரித்துடையவர்கள்.

(இ) நன்மதிப்பு 31.03.214 திகதியில் ரூபா 800 000 ஆக மதிப்பிடப்பட்டுவதுடன் பங்காளர்களது புத்தகங்களில் நன்மதிப்பு கணக்கு காட்டப்படுவதில்லை என தீர்மானிக்கப்பட்டது.

(ஈ) அறவிடமுடியாக்கடனாக ரூபா 200 000 பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டது.

(உ) 31.03.2014 ம் திகதியில் அட்டுறு அலுவலக செலவு ரூபா 55 000 ஆக இருப்பதுடன், ரூபா75 000 விற்பனை செலவுகள் 31.03.2015 ம் ஆண்டு முடிவடைந்த வருடத்திற்குரியதாகும்.

(ஊ) 31.03.2014 திகதியிலான தொக்குகள் ரூபா 865 000 ஆக கிரயத்தில் விலைமதிக்கப்பட்டதுடன் தேறிய கைக்கு கிட்டும் மொத்த பெறுமதியாக ரூபா 985 000 என மதிப்பிடப்பட்டது.

(எ) பங்குடமை வியாபாரத்தின் காணியின் கிரயம் ரூபா 5 000 000 ஆவதுடன் ஆதனம் பொறி மற்றும் உபகரணம் நேர்கோட்டு முறையில் கீழ்வருமாறு தேய்மானம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| கட்டிடம் | - 5% வருடமொன்றிற்கு |
| அலுவலக உபகரணம் | - 20% வருடமொன்றிற்கு |
| மோட்டார் வாகனம் | - 10% வருடமொன்றிற்கு |

(ஏ) பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருக்கும் நிலையான முதலீடுகளில் 01.10.2013 இல் மூன்று வருடங்களுக்கு ஆண்டு வட்டி வீதம் 9% க்கு இடப்பட்டதாகும்.

**வேண்டப்படுவது :**

1. 31.03.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக்கூற்று
2. 31.03.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்ட பகிர் கணக்கு
3. பங்காளர்களது மூலதன கணக்கு மற்றும் நடைமுறை கணக்குகள்
4. 31.03.2014 திகதியிலான நிதி நிலைபரக்கூற்று (ஐந்தொகை)

*(32 புள்ளிகள்)*

(ii) சனத் மற்றும் மகேல முறையே இலாப நட்டங்களை 2:1என்ற விகிதத்தில் பகிரும் பங்குடைமை ஒன்றை நடாத்தி செல்கின்றனர். 31.03.2014 ல் பங்குடைமையை கலைப்பதற்காக அவர்கள் தீர்மானித்தனர். அந்த திகதியிலான நிதிநிலைமைக் கூற்று கீழே தரப்படுகின்றது.

| | ரூபா. ('000) |
|---|---|
| **நடைமுறை அற்ற சொத்துக்கள்** | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 7 500 |
| முதலீடுகள் | 1 250 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | |
| தொக்குகள் | 750 |
| வியாபார வருமதியாளர்கள் | 810 |
| காசும் வங்கியும் | 390 |
| | **10 700** |
| **உரிமை** | |
| மூலதனக் கணக்குகள் | |
| - சனத் | 4 750 |
| - மகேல | 3 250 |
| நடைமுறைக் கணக்குகள் | |
| - சனத் | 245 |
| - மகேல | 325 |
| **நடைமுறை அற்ற பொறுப்புக்கள்** | |
| கடன் கணக்கு - மகேல | 1 500 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | |
| வியாபார சென்மதியாளர்கள் | 630 |
| | **10 700** |

[பக் 3 ஐப் பார்க்க.

**மேலதிக தகவல்கள் ;**

(அ) மோட்டார் வாகனம் ஒன்று ரூபா 2 400 000 ஐ கொண்டு செல்லும் மீதியாக கொண்டிருந்தபோதும் சனத்தால் ரூபா 2 800 000 க்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வியாபாரக் கடன்பட்டோர் 5% கழிவுடன் பணம் வசூலிக்கப்படுகின்றனர். ரூபா 500 000 தொக்குகள் பதிவழிக்கப்படுவதுடன் காசு மற்றும் வங்கி மீதி தவிர ஏனைய சொத்துக்கள் ரூபா 8 200 000 க்கு விற்கப்பட்டது.

(ஆ) எல்லா பொறுப்புக்களும் முற்றாக தீர்க்கப்பட்டன. சென்மதியாளர்களிடமிருந்து10% கழிவு பெறப்பட்டது.

(இ) கலைப்புச் செலவு ஆக ரூபா 800 000 செலவழிக்கப்பட்டது.

**தேவைப்படுவது ;**

1. தேறிய கணக்கு
2. பங்காளர்களது மூலதனக் கணக்கு
3. காசுக் கணக்கு

*(8 புள்ளிகள்)*
*(மொத்தம் 40 புள்ளிகள்)*

**2.** பீற்றர் பொதுக்கூட்டுத்தாபனத்தினது 31.03.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்காக இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்படுகின்றன.

(i) 01.04.2013 நிதி குத்தகை ஒப்பந்தத்தில் மோட்டார் வாகனமொன்று கொள்வனவு செய்யப்பட்டது. அந்த மோட்டார் வாகனத்தின் நியாயப் பெறுமதி ரூபா 4 500 000 இல் உடனடிக் காசாக ரூபா 1 000 000 செலுத்தப்பட்டதுடன் மீதியானது 31.03.2014 இல் இருந்து ஐந்து சமமான ஆண்டுத் தவணைகள்படி ரூபா 800 000 ல் செலுத்தி முடிக்க தீர்மானிக்கப்பட்டது. முதலாவது 31.03.2014 மற்றும் இரண்டாவது தவணைக் கட்டணங்கள் குத்தகை வட்டி முறையே ரூபா 420 000 ம் ரூபா 370 000 ஐ உள்ளடக்கியது. முதலாவது வருடாந்த தவணைக் கட்டணம் உரிய காலத்தில் செலுத்தப்பட்டது. மோட்டார் வண்டியின் பாவனைக்காலம் 05 வருடங்களாகும்.

(ii) கம்பனியானது ஒரு வருட உத்தரவாத அடிப்படையில் பொருட்களை விற்பனை செய்கிறது. மொத்த விற்பனை ரூபா 8 000 000 உத்தரவாதத்துக்கு உட்பட்டதாக 31.03.2014 திகதியிலான உத்தரவாத ஒதுக்கம் மொத்த விற்பனயின் 5%ஆக மதிப்பிடப்பட்டது. 31.03.2013 திகதியிலான நிலுவை உத்தரவாத ஒதுக்கம் ரூபா 350 000 ஆவதுடன் கம்பனி ரூபா 280 000 உத்தரவாத செலவாக 2014.03.31 ல் முடிவடைந்த ஆண்டின்போது செலவழித்தது.

(iii) விற்பனை இல்லையெனில் திரும்பல் என்ற அடிப்படையில் ரூபா 2 000 000 க்கு பட்டியல்படுத்தப்பட்ட பொருட்கள் கம்பனியால், முகவருக்கு அனுப்பப்பட்டிருந்தது. கொள்விலைக்கு 25% இலாபம் குறித்து வைத்து பட்டியல்படுத்தப்பட்டு பொருட்கள் அனுப்பப்படும் 31.03.2014 திகதியில் 60% ஆன பொருட்கள் விற்கப்படாமல் முகவர்களிடம் எஞ்சியிருந்தது.

(iv) பொறி ஒன்றானது ரூபா 1 500 000 01.04.2011 இல் வாங்கப்பட்டது. வாழ்வுக்காலம் 08 வருடங்களாகவும் இறுதிப் பெறுமதி. 300 000 ஆகவும் மதிப்பிடப்பட்டது. எப்படியாயினும் 2013.04.01 ல் இந்தப் பொறியின் பாவனைக் காலம் கொள்வனவு செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 வருடங்களாகவும் இறுதிப் பெறுமதி ரூபா 200 000 ஆகவும் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டது.

(v) 2014.03.01 திகதியில் தரத்திலும் குறைவான மூலப்பொருள்கள் வழங்கியதற்காக இழப்பீட்டு தொகையாக 1 000 000 கோரி கம்பனியால் வழங்குநருக்கு எதிராக வழக்கு வைக்கப்பட்டது. கம்பனி வழக்குரைஞர்கள் கருத்துப்படி இந்த கோரிக்கை வழக்கு கம்பனிக்கு சாதகமாக இருப்பதற்கு கூடியளவு நிகழ்தகவு சாத்தியமுடையதாகும்.

**வேண்டப்படுவது ;**

(1) மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களுக்கு உரிய 31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கணக்கு

(2) மேற்காட்டிய கொடுக்கல் வாங்கல்களை காட்டக்கூடிய நிதி நிலைபரக் கூற்று (ஐந்தொகை) பிரித்தெடுப்பு 31.03.2014 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கு

(3) மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை கருத்தில் கொள்ளாமல் கணக்கிடும் வருடத்திற்கான வருட இலாபம் ரூபா 2 100 000 ஆயின் சரியான ஆண்டு இலாபத்தை காட்டும் கூற்று.

*(15 புள்ளிகள்)*

பக் 4 ஐப் பார்க்க.

**3.** கண்டி விளையாட்டு கழகத்தின் 31.03.2014 திகதியிலான நிதி நிலைபரக் கூற்று வருமாறு.

ரூபா. ('000)

| | கிரயம் | திரண்ட தேய்மானம் | கொண்டு செல்லும் மீதி |
|---|---|---|---|
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| விளையாட்டு மற்றும் அலுவலக உபகரணம் .... | 950 | 180 | 770 |
| தளபாடம் ........................................ | 600 | 120 | 480 |
| | 1 550 | 300 | 1 250 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்குகள் ........................................ | – | 150 | – |
| சந்தா நிலுவை........................................ | – | 125 | – |
| வியாபார வருமதியாளர் ........................ | – | 200 | – |
| காசும் வங்கியும் ........................................ | – | 450 | 925 |
| | | | **2 175** |
| **உரிமை மூலதனம்** | | | |
| திரட்டு நிதியம் ........................................ | – | – | 1 150 |
| பின்போடப்பட்ட வருமானம் ........................ | – | – | 450 |
| **நடைமுறைச் பொறுப்புக்கள்** | | | |
| வியாபார சென்மதியாளர்கள் ........................ | – | 420 | – |
| முன்பெறப்பட்ட சந்தா ........................ | – | 95 | – |
| அட்டுறு செலவு ........................................ | – | 60 | 575 |
| | | | **2 175** |

31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் சாராம்சம் கீழே தரப்படுகிறது

| | ரூபா. ('000) | | ரூபா. ('000) |
|---|---|---|---|
| **பெறுவனவுகள்** | | **கொடுப்பனவுகள்** | |
| ஆண்டு சந்தா | 2 250 | கொள்வனவு | 950 |
| ஆயுள் சந்தா | 400 | தளபாடம் | 800 |
| நன்கொடை | 475 | வாடகை | 240 |
| காசு விற்பனை | 750 | சென்மதியாளர் கொடுப்பனவு | 670 |
| வருமதியாளரிடமிருந்து பெற்றது | 600 | மின்சாரம், தொலைபேசி | 440 |
| பெறப்பட்ட விளையாட்டு வருமானம் | 550 | விளையாட்டுப் போட்டிக்கான செலவு | 410 |
| ஆண்டு விளையாட்டு போட்டியின் வருமானம் | 400 | சம்பளம் | 650 |
| | | விளையாட்டு அமைப்பு செலவு | 330 |
| | | பானங்கள் | 200 |
| | | விளையாட்டு உபகரணம் | 450 |
| | | ஏனைய செலவுகள் | 125 |

**மேலதிக தகவல்கள் ;**

(அ) 31.03.2013 இல் முடிவடைந்த ஆண்டின் விளையாட்டு கழகத்தினால் ஆயுள் அங்கத்துவ முறைமையை அறிமுகப்படுத்தியது. கிடைத்த வருடத்தில் இருந்து 10 வருடங்களுக்கு மேலாக வருமானச் செலவுக்கணக்குக்கு ஆயுட்கால அங்கத்துவக் கட்டணம் சாட்டுதல் செய்ய தீர்மானிக்கப்பட்டது. நிதிநிலைபரக் கூற்றில் பின்போடப்பட்ட வருமானமாக காட்டப்பட்ட தொகையானது மீதியாக உள்ள ஆயுள் அங்கத்துவக் கட்டணமாகும்.

(ஆ) 31.03.2014 திகதியில் சந்தா நிலுவை, முன் செலுத்திய சந்தா முறையே ரூபா 230 000 ம் ரூபா180 000ம் ஆகும். மேலும் வருடாந்த தொடக்கத்தில் ரூபா 45 000 சந்தா நிலுவை பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டது.

(இ) அங்கத்தவர்களுக்காக விளையாட்டுக் கழகம் பேணும் சிற்றுண்டிசாலைக்கான விற்பனை, கொள்வனவு, தொக்கு, வருமதியாளர் மற்றும் சென்மதியாளர் ஆகும்.

(ஈ) 31.03.2014 லுள்ள தொக்கின் பெறுமதி கிரயத்தில் ரூபா 230 000 இற்கு பெறுமதியிடப்பட்டதோடு தேறிய கைக்கு கிட்டிய பெறுமதி ரூபா 195 000 ஆகும்.

(உ) நடைமுறை அற்ற சொத்துக்கள் கீழ்வருமாறு தேய்மானம் செய்யப்படுகின்றன.
விளையாட்டு மற்றும் அலுவலக உபகரணம் - 10% வருடமொன்றிற்கு
தளபாடம் - 20% வருடமொன்றிற்கு

[பக் 5 ஐப் பார்க்க.

(ஊ) நடைமுறை அற்ற சொத்துக்கள் கீழ்காட்டப்பட்டுள்ள திகதியில் கொள்வனவு செய்யப்பட்டது.
விளையாட்டு மற்றும் அலுவலக உபகரணம் - 01.07.2013
தளபாடம் - 01.10.2013

(எ) 2013.03.31 திகதியிலான அட்டுறு செலவுகள் அட்டுற வாடகையை பிரதிபலிப்பபதாகும். கட்டிட வாடகை மாதத்துக்கு ரூபா. 25 000 ஆகும்.

(ஏ) கட்டிட வாடகையில் சிற்றுண்டிசாலை வாடகை 40% ஆன வாடகையாகும். மேலும் சிற்றுண்டிசாலை ஊழியர் சம்பளம் ரூபா 350 000

(ஒ) வருமதியாளர் மற்றும் சென்மதியாளர் மீதிகள் 31.03.2014 திகதியில் முறையே ரூபா 375 000, ரூபா 325 000 ஆகும்.

**வேண்டப்படுவது ;**

(அ) சிற்றுண்டிச்சாலை 31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கு ஆன இலாபத்தை கணிப்பதற்கான வருமானக்கூற்று

(ஆ) 31.03.2014 முடிவடைந்த ஆண்டுக்கான வருமான செலவுக் கணக்கு

(இ) 31.03.2014 திகதியிலான நிலைபரக்கூற்று ஐந்தொகை

*(20 புள்ளிகள்)*

**4.** (i) சிக்மா கட்டிட நிர்மாண மட்டுப்படுத்தப்பட்ட தனியார் கம்பனி வியாபாரமானது கட்டிட நிர்மாண ஒப்பந்தங்களை செய்கிறது. கீழே காணப்படும் தகவல்கள் 01.09.2012 திகதியில் கூடிய ஒப்பந்தம் சம்பந்தமானவை.

| | ரூபா. ('000) |
|---|---|
| ஒப்பந்த விலை இணங்கியது ................................................ | 2 500 |
| மொத்த கிரய மதிப்பீடு............................................................ | 1 800 |
| **31.03.2014 திகதியில்** | |
| மொத்த கிரயம் செலவிட்டது இத்திகதிவரை...................... | 850 |
| சான்றுப்படுத்திய வேலை பெறுமதி .................................... | 1 000 |
| பெற்ற மொத்தசெயற்பாட்டு கொடுப்பனவு | 600 |
| **31.03.2014 திகதியில்** | |
| மொத்த கிரயம் செலவிட்டது இத்திகதிவரை...................... | 950 |
| சான்றுப்படுத்திய வேலை பெறுமதி .................................. | 2 200 |
| கொடுப்பனவு இத்திகதிவரை ............................................... | 1 750 |

நியமக் குறிப்பீடு (specifications) மற்றும் மொத்த கிரய மதிப்பீட்டின் மாற்றங்களால் 31.03.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான ஒப்பந்த விலை மற்றும் ஒப்பந்த வருமானம்முறையே ரூபா 200 000 இனாலும் ரூபா. 300 000 இனாலும் அதிகரித்தது.

**தேவைப்படுவது ;**

1. 31.03.2013 மற்றும் 31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்க்கான வருமானக்கூற்று பிரித்தெடுப்பு
2. 31.03.2013 மற்றும் 31.03.2014 ல் முடிவடைந்த திகதியில் நிதிநிலைபரக் கூற்று பிரித்தெடுப்பு

*(08 புள்ளிகள்)*

[பக் 6 ஐப் பார்க்க.

(ii) இசுறுகிரி வியாபாரம் கொழும்பை தலைமைக் காரிாலமாகவும் கண்டியை கிளைக்காரியாலயமாகவும் கொண்டு இயங்குகிறது. 31.03.2014 திகதியின் பின்வரும் மீதிகள் பிரித்தெடுக்கப்பட்டன.

| | தலைமைக்காரியாலயம் | | கிளை | |
|---|---|---|---|---|
| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
| ஆரம்ப தொக்கு - கிரயத்தில் | 100 000 | – | – | |
| - பட்டியல் விலையில் | – | – | 72 000 | – |
| 01.04.2013 இல் உள்ளவாறானதேறாத இலாபம் | | 14 400 | | |
| கொள்வனவு | 1 960 000 | | | |
| கிளைக்கு அனுப்பிய சரக்கு | – | 860 000 | – | – |
| தலைமைக்காரியாலயத்திலிருந்து கிடைத்த பொருட்கள் | – | – | 800 000 | – |
| விற்பனை | – | 1 940 000 | – | 1 232 000 |
| ஏனைய வருமானம் | – | 128 000 | – | 72 000 |
| விநியோக செலவு | 75 500 | – | 89 100 | – |
| நிர்வாக செலவு | 45 500 | – | 55 200 | – |
| நிதிச் செலவு | 62 000 | – | 32 000 | – |

**மேலதிக தகவல்கள்;**

(அ) தலைமைக் காரியாலயம் ஆனது கிளைக்கு கிரயத்தில் 25% ஐ கூட்டி இலாபம் குறித்து வைத்து பட்டியல் விலையில் பொருட்களை அனுப்புகிறது.

(ஆ) 31.03.2014 திகதியில் இறுதித் தொக்கு

தலமைக் காரியாலயம் - ரூபா. 120 000 கிரயத்தில்

கிளை - ரூபா. 48 000 பட்டியல் விலையில்

**வேண்டப்படுவது ;**

தலைமைக் காரியாலயம் மற்றும் கிளை ஆகியவற்றுக்கான 31.03.2013 ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிரல் வடிவ வருமான கணக்கு

*(07 புள்ளிகள்)*

*(மொத்தம் 15 புள்ளிகள்)*

**5.** ஆடைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் மகாநாம வியாபாரத்தின் 31.03.2014 ஆண்டின் புத்தகங்களிலிருந்து பிரித்தெடுத்த மீதிகள் கீழே தரப்படுகின்றன.

| | வரவு ரூபா. ('000) | செலவு ரூபா. ('000) |
|---|---|---|
| பொறி கிரயம் / தேய்மான ஒதுக்கம் | 1 200 | 300 |
| கட்டிட கிரயம் / தேய்மான ஒதுக்கம் | 800 | 200 |
| மோட்டார் வாகனம் - கிரயம் / தேய்மான ஒதுக்கம் | 750 | 150 |
| தொக்கு 01.04.2014 தினத்தில் | | |
| - மூலப்பொருள் | 110 | – |
| - புத்துருவாகும் வேலை | 72 | – |
| - முடிவடைந்த பொருள் | 224 | – |
| - பொதியிடல் திரவியம் | 45 | – |
| கொள்வனவு மூலப்பொருள் | 975 | – |
| கொள்வனவு முடிவடைந்தபொருள் | 165 | – |
| கொள்வனவு பொதியிடல் திரவியம் | 210 | – |
| உட்சுமைக்கூலி மூலப்பொருள் | 44 | – |
| விற்பனை | – | 3 315 |
| சம்பளமும் கூலியும் | 450 | – |
| மின்சாரம் | 180 | – |
| வாடகை | 90 | – |

[பக் 7 ஐப் பார்க்க.

**மேல்திகத் தகவல்கள்;**

(அ) 31.03.2014 இல் தொக்கு நிலைமை

| | ரூபா. |
|---|---|
| மூலப்பொருள் | 166 000 |
| புத்துருவாகும் வேலை | 88 000 |
| பொதியிடல் திரவியம் | 33 000 |
| முடிவடைந்த பொருள் | 210 000 |

(ஆ) புத்துருவாகும் வேலைகள் மூலக்கிரயத்தில் மதிப்பிடப்படுகின்றன.

(இ) சம்பள கூலி உள்ளடக்கங்கள் கீழேயுள்ளவாறு அமைந்துள்ளன.

தொழிற்சாலை - நேரடி - 30%

தொழிற்சாலை - மறைமுகம் - 30%

விநியோகம் - 40%

(ஈ) 30% ஆன மின்சாரமும் 40% ஆன வாடகையும் தொழில்சாலைக்கு உரியதாகும்

(உ) பொதியிடல், விற்பனைப் பிரிவில் விற்பனைக்கு முன்னர் செய்யப்படுகிறது

(ஊ) ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களுக்கான தேய்மானம் குறைந்து செல்லும் மீதி முறையில் கீழ்வரும் வீதத்தில் செய்யப்படுகிறது. நடப்பு ஆண்டுக்கு தேய்மானம் கணக்கிடப்படவில்லை.

கட்டிடம் - 12%

மோட்டார் வாகனம் - 10%

பொறி - 20%

(எ) தொழிற்சாலையின் கொண்டு செல்லும் பெறுமதி ரூபா 200 000 .

**வேண்டப்படுவது ;**

31.03.2014 ல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்திக் கணக்கு *(10 புள்ளிகள்)*

※ ※ ※